# கல்விச் செல்வம்

MADRAS RECORD OFFICE
28 JAN 195
MADRAS

AHB
617

©

GOVERNMENT OF MADRAS
1958

சென்னை
... க செய்தித் துறை
வெளியீடு

T
NS8
113388

# முன்னுரை

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் கல்வித் துறையில் எற்பட்ட வளர்ச்சியினைத் தமிழ்ப் பெருமக்கள் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். இந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு தமிழ் பெருமக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் முறையில் "கல்விச் செல்வம்" எனும் நூலை வெளியிட்டுள்ளோம்.

நெறியாளர்,
சென்னை அரசாங்க செய்தித் துறை.

“ யாதானும் நாடாமால் ஊராமால்
என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு ”

—திருக்குறள்.

# கல்விச் செல்வம்

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பது தமிழில் வழங்கும் பொன்மொழியாகும். கல்வி சிறந்த தமிழ் நாடு கல்வியின் பெருமையை உணர்ந்து "பிச்சை புகினும் கற்கை நன்றே—பிச்சையெடுத்தாலும் படிப்பது நல்லது என்று கூறியிருக்கிறதெனில் அதில் வியப்பொன்று மில்லை. ஆடைகளாலும், அலங்காரமான நகைகளாலும் ஏற்படும் அழகைவிட "கல்வி அழகே அழகு" என்பதுவே தமிழறிஞர்களின் உயர்ந்த கருத்தாகும்.

ஒரு நாட்டை ஆளும் அர்சாங்கம் அந்த நாட்டின் கல்வித் துறையில் மிகுந்த கவனம் செலுத்தத் தவறுவதில்லை. அள்ள அள்ளக் குறையாத அறிவுச் செல்வத்தையளிக்கும் கல்விச் சுரங்கமன்றோ நாகரிகத்தின்—கலாச்சாரத்தின் அச்சாணியாகும்! எனவே அந்த அச்சாணி பழுதுபடாமல் இருக்கவும்—மேலும் பலனளித்த வண்ணம் இருக்கவும் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

கல்வியை வளர்ப்பது எப்படி? மிக எளிதில் விடை சொல்லி விடலாம். கல்வி நிலையங்களை அதிகமாக்க வேண்டும். அந்த நிலையங்களில் மாணவர்கள் அதிகமாகச் சேர வேண்டும்; சேர்க்கப்படவேண்டும். இவ்வாறு நடந்தால் இதுவே கல்வி வளர்ச்சியின் அறிகுறியாகும்.

இந்த அறிகுறி நமது பாரத நாட்டில்—குறிப்பாகச் சென்னை மாநிலத்தில் காணுமிடந்தோறும் காட்சியளிக்கின்றது என்றால் அது மிகையாகாது. சிறு சிறு கிராமங்கள்தோறும்

ஆதாரப்பள்ளிகளும், ஓராசிரியர் பள்ளிகளும் நாளுக்கு நாள் பெருகி வருவதைப் பார்க்கும்பொழுது தமிழ் மக்களின் உள்ளத்தில் தோன்றியுள்ள புத்துணர்ச்சியையும், அதைப் பயன்படுத்திக் கொண்டு கல்வித்துறை வளர்ச்சியில் சென்னை அரசாங்கம் செய்யும் பணிகளையும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினுல் கல்வித்துறையில் ஏற்பட்ட மாபெரும் வளர்ச்சியும் அந்தத் திட்டத்தின்கீழ் நாம் அடைந்த வெற்றிகளும் மகத்தான சாதனைகளாகும். முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951–52-ம் ஆண்டில் தொடங்கி 1955–56-ம் ஆண்டில் முடிவடைந்தது. இந்த ஐந்தாண்டுக் காலத்தில் நமது மாநிலத்தில் எல்லாவகையான கல்வித் துறைகளிலும் விரைவான முன்னேற்றம் இருந்தது. ஆதாரப் பள்ளிகளும், தொடக்கப்பள்ளிகளும் இன்ன பிற கல்வி நிலையங்களும் திட்டகாலத்தின் முதல் ஆண்டில் இருந்ததைவிடப் பன்மடங்கு திட்ட காலத்தின் முடிவில் பெருகியிருந்தன.

1950–51-ம் ஆண்டினை அடிப்படை ஆண்டாகக்கொண்டு திட்டகாலத்தின் முதல் ஆண்டு—இறுதி ஆண்டு ஆகிய கால கட்டங்களில் இருந்த கல்வித்துறையை ஒப்பிட்டு நோக்கினுல் மட்டுமே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கல்வித்துறையில் சென்னை மாநிலம் செய்து முடித்த சாதனைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

## "வளரும் கல்வி"

தோண்டத் தோண்ட நீர் சுரக்கும் ஊற்று போல் கல்வி யானது படிக்கப்படிக்க அறிவு கொடுக்கும். இந்த ஊற்றின் வளர்ச்சியே நம் உள்ளத்தின் வளர்ச்சியாகும். நாம் விடுதலை அடைந்த பின்னர் ஆண்டுதோறும் கல்வித்துறையில்

குறிப்பிடத்தக்க வளர்ச்சிகண்டு வந்திருக்கிறோம். இந்த வளர்ச்சியைத் திட்டமிட்டு பெருக்கத் தொடங்கியது முதல் ஐந்தாண்டுத்திட்டத்தின்போதுதான். அதாவது 1951–52-ம் ஆண்டில்தான். திட்டகாலத்தின் ஆரம்ப ஆண்டில் கல்வித் துறையில் நாம் பெற்ற வளர்ச்சியை அறிந்துகொள்ள அதற்கு முந்திய ஆண்டுடன்—அதாவது 1950–51-ம் ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கினுல்தான் முடியும்.

## தொடக்கக் கல்வி

"இளமையில் கல்" என்பது அனைவரும் அறிந்ததே. காரணம் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது". எனவேதான் எவ்வளவுக்கெவ்வளவு குழந்தைகளைத் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கவேண்டுமோ, அதற்காக எவ்வளவுக்கெவ்வளவு தொடக்கப் பள்ளிகளைப் புதிதாகத் தொடங்க வேண்டுமோ, அவ்வளவு பணிகளையும் செய்து முடித்தல் இன்றியமையாததாகும்.

1950–51-ம் ஆண்டில் (அதாவது முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்குவதற்கு முந்திய ஆண்டில்) சென்னை மாநிலத்தில் இருந்த தொடக்கப்பள்ளிகள் 15,800 ஆகும். இவைகளில் 1,221,508 சிறுவர்களும், 607,705 சிறுமியர்களும் படித்து வந்தனர். இந்தப் பள்ளிகளில் 42,919 ஆசிரியர் களும், 17,096 ஆசிரியைகளும் பணியாற்றி வந்தனர்.

1951–52-ம் ஆண்டில் அதாவது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 16,118 தொடக்கப் பள்ளிகள் இருந்தன. இந்தப் பள்ளிகளில் 1,243,828 சிறுவர்களும், 616,242 சிறுமியர்களும் படித்து வந்தனர். 42,763 ஆசிரியர்களும், 17,620 ஆசிரியைகளும் பணியாற்றிவந்தனர்.

1955-56-ம் ஆண்டில் அதாவது திட்ட காலத்தின் இறுதி ஆண்டில் 19,644 தொடக்கப் பள்ளிகள் இருந்தன. 1462,236 சிறுவர்களும், 794,648 சிறுமியர்களும் படித்து வந்தனர். 47,550 ஆசிரியர்களும், 22,539 ஆசிரியைகளும் பணியாற்றி வந்தனர்.

அதாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுல் 3,844 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டிருப்பதுடன் மேற் கொண்டு 240,728 சிறுவர்கள், 186,943 சிறுமியர்கள், 4,631 ஆசிரியர்கள், 5,443 ஆசிரியைகள் அதிகமாக இருந்தனர்.

8,675 தொடக்கப் பள்ளிகளைத் புதிதாகத் தொடங்குவதும் 520,425 குழந்தைகளை இப்பள்ளிகளில் சேர்ப்பதும் இரண் டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள் அளவுகளாகும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டகாலத்திற்குள் 6 முதல் 11 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயத் தொடக்கக் கல்வி அளிக்க வேண்டுமென்று அகில இந்திய தொடக்கக் கல்வி ஆலோசனைக்குழு சிபார்சு செய்துள்ளது.

## ஆதாரக் கல்வி

" கல்வி பயில்வோம்—உடன் கைத்தொழில் செய்வோம் " என்பதுவே அண்ணல் காந்தியடிகளின் அருள்வாக்கு. சிறுவர், சிறுமியர்களுக்குக் கல்வி அறிவு புகட்டும்போதே கைத்தொழில் அறிவையும் புகட்டுவதுதான் ஆதாரக் கல்வித் திட்டத்தின் அடிப்படை அம்சமாகும்.

தொடக்கக் கல்வி நிலையங்களில் சிலவற்றை சிறுகச் சிறுக ஆதாரக் கல்வி நிலையங்களாக மாற்றுவது, புதிய ஆதாரப் பள்ளிகளைத் தொடங்குவது—இந்த முறைகள் மூலம் சென்னை மாநிலத்தில் ஆதாரக் கல்விக்கு இடப்பட்ட அஸ்திவாரம் வலுப்படுத்தப்பட்டது.

1950–51-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 237 ஆதாரப் பள்ளிகள் இருந்தன. இவைகளில் 16,228 சிறுவர்களும், 7,500 சிறுமியர்களும் படித்து வந்தனர். 1,250 ஆசிரியர்களும், 259 ஆசிரியைகளும் பணியாற்றிவந்தனர்.

1951–52-ம் ஆண்டில் 317 ஆதாரப் பள்ளிகள் இருந்தன. 24,554 சிறுவர்களும், 13,590 சிறுமியர்களும் படித்து வந்தனர். 1,638 ஆசிரியர்களும், 520 ஆசிரியைகளும் பணியாற்றிவந்தனர்.

1955–56-ம் ஆண்டில் 1,886 ஆதாரப் பள்ளிகள் இருந்தன. 150,134 சிறுவர்களும், 88,044 சிறுமியர்களும் படித்து வந்தனர். 7,601 ஆசிரியர்களும், 3,613 ஆசிரியைகளும் பணியாற்றிவந்தனர்.

தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரத்துக்கருகில் புதிதாகக் கட்டப்படும் உயர் நிலைப்பள்ளி மாணவியர் விடுதி.



முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொண்டு 1,649 ஆதாரப் பள்ளிகள் புதிதாக தொடங்கப்பட்டிருப்பதுடன், மேற்கொண்டு 133,906 சிறுவர்களும், 80,544 சிறுமியர்களும், 6,351 ஆசிரியர்களும், 3,454 ஆசிரியைகளும் 1950–51-ல் இருந்தவர்களைக் காட்டிலும் அதிகமாக இருந்தனர். தொடக்கப் பள்ளிகளிற் சிலவற்றை ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவதன் மூலம் 1,500 ஆதாரப் பள்ளிகளைப் புதிதாகத் தொடங்குவதும், 6,000 ஆசிரியருக்கு மறுபடியும் ஆதாரப் பயிற்சி அளிப்பதும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செய்து முடிக்கப் பெறும். சென்னை மாநிலத்தில் 900 ஓராசிரியர் தொடக்க (ஆதார)ப் பள்ளிகளைப் புதிதாகத் தொடங்க அரசினர் அனுமதியளித்துள்ளனர்.

## உயர்நிலைப் பள்ளிப் படிப்பு

கல்வி அமைப்பில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பானது ஒரு முக்கியமான இடம் வகிக்கிறதெனலாம். மாணவர்கள் தொடர்ந்து மேற் படிப்புக்குச் செல்வதோ—தொழிற் பயிற்சி மேற்கொள்வதோ—எதுவாயினும் இவ்வுயர் நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்த பின்னர்தான் அவ்வாறு செய்ய இயலும்.

1950–51-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 507 ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளும், 130 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளும் இருந்தன. அதாவது 637 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. இவைகளில் 268,990 மாணவர்களும், 64,564 மாணவிகளும் பயின்று வந்தனர். 10,694 ஆசிரியர்களும், 2,257 ஆசிரியைகளும் பணியாற்றி வந்தனர்.

1951–52-ம் ஆண்டில் 748 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. 292,076 மாணவர்களும், 68,532 மாணவிகளும் படித்துவந்தனர். 11,481 ஆசிரியர்களும், 2,512 ஆசிரியைகளும் பணியாற்றி வந்தனர்.



எஸ். ஐ. இ. டி. பெண்கள் கல்லூரி, சென்னை.

1955-56-ம் ஆண்டில் 814 உயர்நிலைப் பள்ளிகளும், 336,555 மாணவர்களும், 100,211 மாணவிகளும் படித்து வந்தனர். 14,055 ஆசிரியர்களும், 3,312 ஆசிரியைகளும் பணியாற்றி வந்தனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாநிலத்தில் மேற்கொண்டு புதிதாகத் தொடங்கப்பெற்ற உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 177. அதிகமான மாணவர்கள் எண்ணிக்கை 67,565, மாணவிகள் எண்ணிக்கை 35,647, ஆசிரியர்கள் எண்ணிக்கை 3,361, ஆசிரியைகள் எண்ணிக்கை 1,055. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 450 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப் படுவதுடன், 18,000 மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்படு வார்கள்.

**கல்லூரிப் படிப்பு.**—கல்வியென்னும் இயந்திரத்தின் இன்றி யமையாத பகுதி கல்லூரிப் படிப்பாகும். சென்னைப் பல்கலைக்

கழகமும்—அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் நமது மாநிலத்தின் கல்வித் துறையில் பெரும் பங்கேற்றுள்ளன.

## கலைக் கல்லூரிகள்

1950–51-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 27 ஆண்கள் கல்லூரிகளும் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மற்றும் இரண்டாம் பிரிவுக் கல்லூரிகள் உட்பட) 9 பெண்கள் கல்லூரிகளும் (மேற் சொன்ன பிரிவுகள் உட்பட) இருந்தன. இந்தக் கல்லூரிகளில் மொத்தம் 21,300 ஆண்களும், 3,186 பெண்களும் படித்து வந்தனர்.

1951-52-ம் ஆண்டில் 31 ஆண்கள் கல்லூரிகளும், 10 பெண்கள் கல்லூரிகளும் இருந்தன. 24,511 ஆண்களும், 3,739 பெண்களும் படித்து வந்த

சென்னைப் பல்கலைக் கழக மாணவியர்க்காக சென்னையில் புதிதாகக் கட்டப்பட்ட மாணவியர் விடுதி.



1955–56-ம் ஆண்டில் 36 ஆண்கள் கல்லூரிகளும், 15 பெண்கள் கல்லூரிகளும் இருந்தன. 31,490 ஆண்களும், 5,408 பெண்களும் படித்து வந்தனர்.

திட்ட காலத்தில் 9 ஆண்கள் கல்லூரிகளும், 6 பெண்கள் கல்லூரிகளும் புதிதாகத் தொடங்கப்பட்டன. திட்ட காலத்திற்கு முந்திய ஆண்டினைவிட திட்ட காலத்தில் 10,190 ஆண்களும், 2,222 பெண்களும் அதிகமாக இக் கல்லூரிகளில் படித்தனர்.

## தொழிற் கல்லூரிகள்

1950–51-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 4 மருத்துவக் கல்லூரிகளும் (நாட்டு வைத்தியக் கல்லூரி உட்பட) 5 ஐந்து இன்ஜினியரிங் கல்லூரிகளும் (டெக்னாலஜி கல்லூரிகள் உட்பட) ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும், ஒரு சட்டக் கல்லூரியும், ஒரு வனவளப் பயிற்சிக் கல்லூரியும் (Forest College), ஒரு விவசாயக் கல்லூரியும், 7 ஆசிரியர் கல்லூரிகளும், ஒரு உடற்பயிற்சிக் கல்லூரியும் இருந்தன.

மருத்துவக் கல்லூரிகளில் 2,280 ஆண்களும், 670 பெண்களும், இன்ஜினியரிங் கல்லூரிகளில் 1,658 ஆண்களும், 4 பெண்களும், கால்நடை மருத்துவக் கல்லூரியில் 347 ஆண்களும், 5 பெண்களும், விவசாயக் கல்லூரியில் 222 ஆண்களும், 3 பெண்களும், வனவளப் பயிற்சிக் கல்லூரியில் 109 ஆண்களும், சட்டக் கல்லூரியில் 759 ஆண்களும், 12 பெண்களும், ஆசிரியர் கல்லூரிகளில் 326 ஆண்களும், 143 பெண்களும், உடற்பயிற்சிக் கல்லூரியில் 278 ஆண்களும், 44 பெண்களும் படித்து வந்தனர்.

113388

1951–52-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 5 மருத்துவக் கல்லூரிகளும் (2,280 ஆண்களும், 670 பெண்களும்), 5 இன்ஜினியரிங் கல்லூரிகளும் (2,072 ஆண்களும், 5 பெண்



மருத்துவக் கல்லூரி, மதுரை.

களும்), ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும் (307 ஆண்களும், 7 பெண்களும்), ஒரு விவசாயக் கல்லூரியும் (276 ஆண்களும், 6 பெண்களும்), ஒரு வனவளப் பயிற்சிக் கல்லூரியும் (64 ஆண்கள் மட்டும்), ஒரு சட்டக் கல்லூரியும் (1,052 ஆண்களும், 22 பெண்களும்), 7 ஆசிரியர் கல்லூரிகளும் (338 ஆண்களும், 151 பெண்களும்), ஒரு உடற்பயிற்சிக் கல்லூரியும் (300 ஆண்களும், 54 பெண்களும்) இருந்தன.

1955–56-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 5 மருத்துவக் கல்லூரிகளும் (3,238 ஆண், 679 பெண்), 5 இன்ஜினியரிங் கல்லூரிகளும் (2,286 ஆண்கள் மட்டில்), ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும் (341 ஆண், 3 பெண்), ஒரு விவசாயக் கல்லூரியும் (338 ஆண், 8 பெண்), ஒரு வனவளப் பயிற்சிக் கல்லூரியும் (98 ஆண்கள் மட்டில்), ஒரு சட்டக் கல்லூரியும் (1,239 ஆண், 19 பெண்), 13 ஆசிரியர் கல்லூரிகளும் (809 ஆண், 186 பெண்), ஒரு உடற்பயிற்சிக் கல்லூரியும் (330 ஆண், 84 பெண்) இருந்தன.

பொதுவாக தொழிற் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் சென்னை மாநிலத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருப்திகரமான வளர்ச்சியும், முன்னேற்றமும் இருந்தன.

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

1950–51-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 23 ஆண்கள் பயிற்சிப் பள்ளிகளும், 35 பெண்கள் பயிற்சிப் பள்ளிகளும் அதாவது மொத்தம் 58 பள்ளிகள் இருந்தன. இவைகளில் 4,044 ஆண்களும், 3,713 பெண்களும் பயிற்சி பெற்றுவந்தனர்.

1951–52-ம் ஆண்டில் 61 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. இவைகளில் 4,745 ஆண்களும், 4,003 பெண்களும் பயிற்சிப் பெற்றுவந்தனர்.

சென்னை மருத்துவக் கல்லூரி விஸ்தரிக்கப்படுகிறது.



1955–56-ம் ஆண்டில் 66 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. இவைகளில் 4,037 ஆண்களும், 4,079 பெண்களும் பயிற்சி பெற்று வந்தனர்.

திட்ட காலத்தில் 8 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டன. ஆணகளைக் காட்டிலும் பெணகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது குறிபபிடத்தக்கதாகும்.

## ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள்

1950–51-ம் ஆண்டில் 26 ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் கள் சென்னை மாநிலத்தில் இருந்தன. இவைகளில் 1,538 ஆண்களும், 768 பெண்களும் பயிற்சி பெற்று வந்தனர்.

1951–52-ம் ஆண்டில் 28 ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. 1,463 ஆண்களும், 799 பெண்களும் பயிறசி பெறறு வந்தனர்.

1955–56-ம் ஆண்டில் 67 ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. 4,620 ஆண்களும், 1,740 பெண்களும் பயிற்சிபெற்று வந்தனர்.

திட்டக் காலத்தில் ஆதாரப் பள்ளிகள்—ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருந்தது என்பது கவனத்திற்குரியதாகும்.

## தொழில்-நுணுக்கப் பயிற்சி நிறுவனங்கள்

1950–51-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 7 தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனங்கள் இருந்தன. இவைகளில் 2,910 ஆண்கள் பயிற்சி பெற்றுவந்தனர்.



சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கென சென்னையில்
புதிதாகக் கட்டப்படும் மாணவர் விடுதி.

1951–52-ம் ஆண்டில் 7 நிறுவனங்களில் 2,865 ஆண்களும், 4 பெண்களும் பயிற்சி பெற்றுவந்தனர்.

1955–56-ம் ஆண்டில் 9 நிறுவனங்களில் 3,859 ஆண்களும், 5 பெண்களும் பயிற்சி பெற்றுவந்தனர்.

## தொழிற் பள்ளிகள்

1951–52-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் இருந்த 30 தொழிற் பள்ளிகளில் 1,691 ஆண்களும், 42 பெண்களும் ; 1951–52-ம் ஆண்டில் இருந்த 33 தொழிற் பள்ளிகளில் 1,805 ஆண்களும், 76 பெண்களும் ; 1955–56-ம் ஆண்டில் இருந்த 31 தொழிற் பள்ளிகளில் 2,175 ஆண்களும், 132 பெண்களும் பயிற்சி பெற்றுவந்தனர்.

## முதியோர் கல்வி

நாட்டு விடுதலைக்குப் பின் சென்னை அரசினர் முதியோர் கல்வி வளர்ச்சிக்காகச் செய்த பணியானது குறிப்பிடத் தாகும். முக்கியமாக, பொருளாதாரச் சூழ்நிலைகளாலும், ஏனைய பாதகமான சூழ்நிலைகளாலும் இளமையிலே படிக்காமல் இருந்துவிட்ட முதியோர்களுக்குக் கல்வி அறிவு புகட்டுவதே இப்பணியின் நோக்கமாகும். இப்பணிக்கு எத்தகைய ஆதரவு இருக்குமோ என்று முதலில் ஐயுற்ற போதிலும்—நாளா வட்டத்தில் அதன் பலன் பலவாறுகப்பெருகவே மக்களிடையே இப்பணிக்கு மகத்தான ஆதரவு இருந்தது அதன் பயனுக முதியோர் கல்வி நிலையங்கள் பெருகலாயின.

1950–51-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் 459 முதியோர் கல்வி நிலையங்கள் இருந்தன். இவைகளில் 11,867 ஆண்களும், 452 பெண்களும் கல்வி அறிவு பெற்றுவந்தனர்.

1951–52-ம் ஆண்டில் 759 முதியோர் கல்வி நிலையங்கள் இருந்தன. இவைகளில் 19,240 ஆண்களும், 1,216 பெண்களும் படித்து வந்தனர்

1955–56-ம் ஆண்டில் 1,135 முதியோர் கல்வி நிலையங்கள் இருந்தன. 30,026 ஆண்களும் 3,120 பெண்களும் கல்வி அறிவு பெற்றுவந்தனர்.

முதியோர் கல்வியானது திட்ட காலத்தின் தொடக்கத்தில் இருந்ததைக் காட்டிலும் திட்ட காலத்தின் முடிவில் மகத்தான வளர்ச்சியுற்றிருந்தது.

இவ்வாருக முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அறிவுச் செல்வத்தை அளிக்கும் அரிய கல்வியை சென்னை அரசு பல துறைகளிலும் வளர்த்து வந்தது. ஆயிரம் அன்ன சத்திரங்கள் கட்டுதலினும் ஆங்கோர் மகனுக்கு எழுத்தறிவிக்கும் பணி ஈடு இணையற்ற பணியாகும். அந்தப் பணியைச் செய்து முடித்ததிலும்—பலனை அடைவதிலும் நாம் அடைந்த வெற்றி மகத்தான வெற்றியாகும். இனி அடையப்போகும் வெற்றியும் அத்தகையதே !

**முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும்--இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலும் சென்னை மாநிலத்தில் கல்வித்துறையில் உண்டான வளர்ச்சியைக் காட்டும் புள்ளி விவரம்.**

| விவரம். | முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முந்திய ஆண்டு. 1950–51. | திட்டக்காலத்தின் இறுதி ஆண்டு. 1955–56. | 2-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டு. 1956-57 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. **ஆரம்பப் பள்ளிகள்** .. .. .. | 15,800 | 19,644 | 20,946 |
| சிறுவர்கள் .. .. .. | 12,221,508 | 1,462,236 | 1,595,920 |
| சிறுமியர்கள் .. .. .. | 6,07,705 | 7,94,648 | 8,99,610 |
| ஆசிரியர்கள் .. .. .. | 42,919 | 47,550 | 50,988 |
| ஆசிரியைகள் .. .. .. | 17,096 | 22,539 | 24,342 |
| 2. **ஆதாரப் பள்ளிகள்** .. .. | 237 | 1,886 | 1,927 |
| சிறுவர்கள் .. .. .. | 16,228 | 150,134 | 159,166 |
| சிறுமியர்கள் .. .. .. | 7,500 | 88,044 | 92,976 |
| ஆசிரியர்கள் .. .. .. | 1,250 | 7,601 | 5,577 |
| ஆசிரியைகள் .. .. .. | 259 | 3,613 | 2,757 |

| விவரம். | முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முந்திய ஆண்டு. 1950–51. | திட்டகாலத்தின் இறுதி ஆண்டு. 1955–56. | 2-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டு. 1956–1957. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **3. உயர் நிலைப் பள்ளிகள்** .. .. | 637 | 814 | 1,030 |
| மாணவர்கள் .. .. .. | 268,990 | 3,36,555 | 337,240 |
| மாணவிகள் .. .. .. | 64,564 | 100,211 | 1,35,876 |
| ஆசிரியர்கள் .. .. .. | 10,694 | 14,055 | 16,337 |
| ஆசிரியைகள் .. .. .. | 2,257 | 3,312 | 4,069 |
| **4. ஆண்கள் கலைக் கல்லூரிகள்** .. | 27 | 36 | 42 |
| **பெண்கள் கலைக் கல்லூரிகள்** .. | 9 | 15 | 15 |
| மாணவர்கள் .. .. | 21,300 | 31,490 | 34,905 |
| மாணவிகள் .. .. .. | 3,186 | 5,408 | 6,099 |
| **5. மருத்துவக் கல்லூரிகள்** .. (நாட்டு வைத்தியக் கல்லூரி உள்பட.) | 4 | 5 | 5 |
| மாணவர்கள் .. .. .. | 2,280 | 3,238 | 3,202 |
| மாணவிகள் .. .. .. | 670 | 679 | 648 |

| | | | |
|---|---|---|---|
| 6. இன்ஜினியரிங் கல்லூரிகள் .. | 5 | 5 | 6 |
| (டெக்னாலஜி கல்லூரிகள் உட்பட.) | | | |
| மாணவர்கள் .. .. .. | 1,658 | 2,286 | 2,606 |
| மாணவிகள் .. .. .. | 4 | .. | 1 |
| 7. கால்நடை மருத்துவக் கல்லூரி.. | 1 | 1 | 1 |
| மாணவர்கள் .. .. .. | 347 | 341 | 491 |
| மாணவிகள் .. .. .. | 5 | 3 | 5 |
| 8. விவசாயக் கல்லூரி .. .. | 1 | 1 | 1 |
| மாணவர்கள் .. .. .. | 222 | 338 | ·405 |
| மாணவிகள் .. .. .. | 3 | 8 | 11 |
| 9. வனவளப் பயிற்சிக் கல்லூரி .. | 1 | 1 | 1 |
| மாணவர்கள் .. .. .. | 109 | 98 | 139 |
| மாணவிகள் .. .. .. | .. | .. | .. |
| 10. சட்டக் கல்லூரி .. .. .. | 1 | 1 | 1 |
| மாணவர்கள் .. .. .. | 759 | 1,239 | 1,177 |
| மாணவிகள் .. .. .. | 12 | 19 | 31 |

| விவரம். (1) | முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முந்திய ஆண்டு. 1950–51. (2) | திட்டக்காலத்தின் இறுதி ஆண்டு. 1955–56. (3) | 2-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டு. 1956–57. (4) |
|---|---|---|---|
| 11. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் .. | 7 | 13 | 15 |
| மாணவர்கள் .. .. .. | 326 | 809 | 918 |
| மாணவிகள் .. .. .. | 143 | 186 | 259 |
| 12. உடற் பயிற்சிக் கல்லூரி .. .. | 1 | 1 | 2 |
| மாணவர்கள் .. .. .. | 278 | 330 | 447 |
| மாணவிகள் .. .. .. | 44 | 84 | 100 |
| 13. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. | 58 | 66 | 57 |
| மாணவர்கள் .. .. .. | 4,044 | 4,037 | 3,611 |
| மாணவிகள் .. .. .. | 3,713 | 4,079 | 3,774 |
| 14. ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் .. .. .. | 26 | 67 | 81 |
| மாணவர்கள் .. .. .. | 1,538 | 4,620 | 7,302 |
| மாணவிகள் .. .. .. | 765 | 1,740 | 2,990 |

| | | | |
|---|---|---|---|
| 15. தொழில் நுணுக்க நிலையங்கள். | 7 | 8 | 9 |
| மாணவர்கள் .. .. .. | 2,910 | 3,859 | 4,168 |
| மாணவிகள் .. .. .. | .. | 5 | 1 |
| 16. தொழிற் பள்ளிகள் .. .. | 30 | 31 | 52 |
| மாணவர்கள் .. .. .. | 1,691 | 2,175 | 3,668 |
| மாணவிகள் .. .. .. | 42 | 132 | 282 |
| 17. முதியோர் கல்வி நிலையங்கள் .. | 459 | 1,135 | 1,550 |
| ஆண்கள் .. .. .. | 11,867 | 30,026 | 37,897 |
| பெண்கள் .. .. .. | 4 52 | 3,120 | 8,346 |

Govt. Press, Madras

1085/9/81